டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 11.03.2026 புதன்கிழமை | பக்கங்கள் 24 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 216 - Madurai | Online Edition

# பழங்குடியினரின் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாத்து வளர்த்து அடுத்த தலைமுறைக்கு பரப்ப அரசு தொடர்ந்து முயற்சி

புது தில்லி, மார்ச் 10

இந்தியாவில் உள்ள பழங்குடியினரின் கலை, கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் வாய்மொழி மரபுகளை பாதுகாக்கவும் வளர்த்தெடுக்கவும் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நாட்டின் பல பகுதிகளில் ஏழு மண்டல கலாச்சார மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மையங்கள் நாட்டுப்புற மற்றும் பழங்குடி கலைகளை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள், திருவிழாக்கள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளை தொடர்ந்து நடத்துகின்றன.

பழங்குடி கலாச்சாரத்தை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்து வதற்காக ஹான்பில் திருவிழா, பழங்குடியினர் நடனத் திருவிழா, ஆதிவாசி பெருவிழா போன்ற விழாக்கள் நடத்தப்படுகின்றன. மேலும் பழங்குடியினர் ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் பழங் குடியினரின் கலாச்சாரம், பழக்க வழக்கம் மற்றும் பாரம்பரியங் களை ஆய்வு செய்து புத்தகங்கள், ஆவணப்படங்கள் மற்றும் பிற ஆவணங்களாக பதிவு செய்கின்றனர்.

சாகித்ய அகாடமி பழங்குடி மொழிகளுக்கும் வாய்மொழி இலக்கியங்களுக்கும் முக்கியத்துவம் அளித்து பாா சம்மான் என்ற விருதை ஆண்டுதோறும் வழங்குகிறது. பழங்குடி மற்றும் வாய்மொழி இலக்கியங்களை சேகரித்துப் பாதுகாக்கச் சிறப்பு மையங்களையும் உருவாக்கியுள்ளது. பல பழங்குடி மொழி களில் மொழி மாநாடுகளும் நடத்தப்படுகின்றன. ஆண்டு தோறும் ஆகஸ்ட் 9 அன்று உலக பழங்குடியினர் தினத்தை முன்னிட்டு பழங்குடி எழுத்தாளர்கள் சந்திப்பும் நடைபெறுகிறது.

பழங்குடி கலைஞர்கள் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அவர்களுக்கு கௌரவத் தொகை மற்றும் பிற செலவுகளும் வழங்கப்படு கின்றன. 2025 ஆம் ஆண்டில் 6476 கலைஞர்கள் மற்றும் கலாச்சார நிபுணர்கள் இந்த உதவியைப் பெற்றுள்ளனர். மேலும் அழிந்து வரும் பழங்குடி கலைகளைப் பாதுகாக்க பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பழங்குடி உடைகள், இசைக்கருவிகள், தினசரி பயன்பாட்டு பொருட்கள் போன்றவை காட்சிப்படுத்தப் பட்டு சுற்றுலா பயணிகளுக்கும் பொதுமக்களுக்கும் அவர்களின் கலாச்சாரம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இவ்வாறு பல்வேறு திட்டங்கள் மூலம் பழங்குடியினரின் கலை, இசை, நடனம் மற்றும் பாரம்பரியங்களை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு பரப்ப அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

மக்களவையில் மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

## பாக்டீரியா கசிவு சோதனை : வேளாண்மை கல்லூரி மாணவர்கள் செய்முறை விளக்கம்



திருச்சி, மார்ச் 10

திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், துவாக்குடியில் உள்ள விவசாயிகளிடம் நுலிகுள out test (பாக்டீரியா கசிவு சோதனை) பற்றி செய்முறை விளக்கம் அளித்தனர்.

செய்முறை விளக்கம் : பாதிக்கப்பட்ட தாவரத்தின் தண்டு அல்லது இலையை வெட்டி, ஒரு கிளாஸ் தண்ணீரில் 15 நிமிடம் வைக்கும்போது, அதிலிருந்து பால் போன்ற வெள்ளை நிற பாக்டீரியா திரவம் (ooze) வெளியேறுவதை வைத்து, நோய் உறுதியாகிறது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வேளாண் துறைக்கு கடன் வழங்குவதை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கை

## மத்திய நிதித்துறை இணையமைச்சர் தகவல்

புது தில்லி, மார்ச் 10

விவசாயத் துறைக்கு நிறுவன ரீதியான கடன் வரவை அதிகரிக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நபார்டு வங்கியைத் தவிர, ரிசர்வ் வங்கியின் முன்னணி வங்கி திட்டத்தின் ஒரு பகுதியாக, மாநில அளவில் ஒருங் கிணைக்கப்பட்ட முன்னுரிமைத் துறையின் கீழ் கடன் திறனை மதிப்பிடுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு ஆண்டும் சாத்தியமான இணைக்கப்பட்ட கடன் திட்டம் (பி. எல். பி) தயாரிக்கப்படுகிறது. பி.எல்.பி.க்களின் மாநில அளவிலான ஒருங்கிணைப்பு, கடந்த கால போக்குகள், அரசின் முன்னுரிமைகள் போன்றவற்றின் அடிப்படையில், நபார்டு வங்கியுடன் கலந்தாலோசித்து மத்திய அரசு விவசாயத்திற்கு கடன் இலக்கை நிர்ணயித்தது.

மேலும், நபார்டு வங்கி நிதி நிறுவனங்களுக்கு நிதி உதவியை வழங்குகிறது. பிராந்திய கிராமப்புற வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள், வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள், தனியார் நிதி நிறுவனங்கள் தங்கள் வளங்களை அதிகரித்து, பயிர் மற்றும் அறுவடை பருவங்களில் விவசாயிகளின் கடன் தேவைகளை பூர்த்தி செய்ய போதுமான பணப்புழக்கத்தை வழங்குகின்றன.

இந்த தகவலை மத்திய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌதரி நேற்று மாநிலங்களவையில் எழுத்துமூலம் அளித்த பதிலில் தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கோடை பருவ பருத்தி சாகுபடி : மரபணு மாற்ற பருத்தி விதைகளை விற்றால் நடவடிக்கை

## விதை ஆய்வு துணை இயக்குநர் எச்சரிக்கை



ஈரோடு, மார்ச் 10

ஈரோடு விதை ஆய்வு துணை இயக்குநர் பெ. சுமதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது :

ஈரோடு மாவட்டத்தில் ஆண்டுதோறும் சுமார் 250 ஹெக்டர் நிலப்பரப்பில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் பெரும்பாலும் கோடை பருவ சாகுபடி ஆகும். நடப்பு கோடை பருவ பருத்தி சாகுபடிக்கு பருத்தி விதைகள் விதை விற்பனை நிலையங்களில் வரப் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து. ஈரோடு வட்டார பகுதிகளில் முக்கிய விதை விநியோகஸ்தர்கள் மற்றும் முக்கிய விதை விற்பனை நிலையங்களில் விதை ஆய்வு துணை இயக்குநர் தலைமையில் விதை ஆய்வாளர்கள் ஈரோடு மற்றும் தாராபுரம் ஆகியோர் குழு ஆய்வு மேற்கொண்டனர்.

பருத்தி சாகுபடியில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பி.டி எனப்படும் காய்ப்புழுவிற்கு எதிர்ப்பு சக்தி உடைய மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை பெரும்பான்மையான பருத்தி விவசாயிகளால் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் அரசால் அங்கீகரிக்கப்படாத களைக் கொல்லி எதிர்ப்பு சக்தி உள்ள மரபணு மாற்றப்பட்ட பருத்தி விதைகள் விற்பனை செய்வது சட்ட விரோதம் ஆகும்.

இவ்வாறு அரசின் ஆய்வுக்கு உட்படுத்தப்படாத மற்றும் ஒப்புதல் பெறப்படாத விதைகளைக் கொண்டு சாகுபடி செய்யும் போது விவசாயிகளுக்கு பெரும் மகசூல் இழப்பு ஏற்படுவதுடன்

சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் நாளடைவில் மனித குலத்திற்கு கேடு ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, ஈரோடு மாவட்டத்தில் உள்ள விதை விற்பனை யாளர்கள் சாதாரண ரக பருத்தி விதைகள் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பி.டி. விதைகளை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். களைக்கொல்லிக்கு எதிர்ப்பு சக்தி உள்ள மரபணு மாற்று பருத்தி விதைகளை விற்பனை செய்வதும், சாகுபடி செய்வதும் சட்ட விரோதமாகும். இதனை மீறி விற்பனை செய்பவர்கள் மீது இன்றியமையாத பொருட்கள் சட்டம் 1955ன்-படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், விதை விற்பனை உரிமம் பெறாமல் விதைகளை விற்பனை செய்பவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

## மகளிர் தினத்தை முன்னிட்டு போட்டிகள் & விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, மார்ச் 10

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம் வேளாண் இறுதி ஆண்டு மாணவிகள், தங்களின் ஊரக வேளாண் பயிற்சி அனுபவத்தின் ஒரு பகுதியாக புள்ளம்பாடி வட்டத்திற்குள் உட்பட்ட மெஷின் ஸ்ட்ரீட் அனைத்து மகளிர்களுக்கும் போட்டிகளை நடத்தினர். இதில் வெற்றி பெற்ற பெண்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து பெண்கள் அதிகாரம் என்னும் தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், 'பட்டங்கள் ஆவது சட்டங்கள் செய்வது பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்', பெண்கள் என்பவர்கள் யாருமே யோசிக்காத அளவுக்கு வலிமை பெற்றவர்கள்... விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கிராமத்தை சேர்ந்த அனைத்து மகளிர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பெ.மோகனப்பிரியா, சீ.முத்து மதி, ர.நர்மதா, அ.நிறைமதி, ரா.பவித்ரா, ரா.பிரியா, க.ரூபஸ்ரீ, க.ச.சாதனா, அ.சாலினி. செ.சந்தியா உள்ளிட்ட மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# பழங்குடியின விவசாயிகளுக்கு 'தோட்டக்கலை பயிர்களில் மண் மற்றும் பயிர் மேலாண்மை' மற்றும் 'காய்கறி மற்றும் மலர் பயிர்களின் மேம்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் பயிற்சி

சேலம், மார்ச் 10

பழங்குடியின விவசாயிகளுக்கான 'தோட்டக்கலை பயிர்களில் மண் மற்றும் பயிர் மேலாண்மை மற்றும் காய்கறி மற்றும் மலர் பயிர்களின் மேம்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்களுக்கான பயிற்சி' என்ற தலைப்புகளில் ஒரு நாள் பயிற்சி முகாம் 5.3.26 அன்று சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், கருமந்துறை கிராமத்தில் நடைபெற்றது.

இந்த பயிற்சி முகாமில் இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம், பெங்களூர் மற்றும் சேலம் மாவட்ட பழங்குடியினர் நலத்துறை இணைந்து நடத்தினர்.

இந்த பயிற்சி முகாம் இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் வ.சங்கரின் தலைமையில் நடைபெற்றது.



அவர் தோட்டக்கலை பயிர்களில் மண் வளத்தை பாதுகாக்கும் முறைகள், பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் விளைச்சலை அதிகரிக்கும் நவீன சாகுபடி முறைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தார். மேலும், உயர் விளைச்சலை தரக்கூடிய காய்கறிகள் மற்றும் மலர் பயிர்களை சாகுபடி செய்து விவசாயிகள் அதிக வருமானம் பெறும் வழிமுறைகள் குறித்தும் பயிற்சி அளித்தார்.



இந்நிகழ்ச்சியில் சேலம் மாவட்டம் கருமந்துறை தோட்டக் கலைத் துறையிலிருந்து தோட்டக்கலை உதவி இயக்குனர் சு.சிந்து, கலந்து கொண்டு, அரசு வழங்கும் தோட்டக்கலைத் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். மேலும், பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்து வதில் ஐந்திணை திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத் தார் மற்றும் தோட்டக்கலை உதவி அலுவலர் செந்தில்குமார், பழங்குடியினர் வாழ்வு மேம்பாட்டுக்கான திட்டத்தின் முக்கியத்து வத்தை எடுத்துரைத்தார். பயிற்சி முடிவில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பழங்குடியினர் ஐந்திணை திட்டத்தின் கீழ் காய்கறி விதைப்பைகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை விவேகானந்தா அறக்கட்டளை மற்றும் பூர்வ மலை மலையாளி விவசாய மேம்பாட்டு சங்கம் கருமந்துறை செய்திருந்தனர்.

இந்த பயிற்சி முகாமில் 200-க்கும் மேற்பட்ட பழங்குடியின விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# இயற்கை உரங்களை பயன்படுத்தி மிளகாய் உற்பத்தியில் சாதனை படைக்கும் கமுதி விவசாயி ராமர் – ஒரு பார்வை

வறட்சி மாவட்டம் என்றும் வானம் பார்த்த பூமி என்றும் பெயர் பெற்ற ராமநாதபுரம் மாவட்டத்தில், கமுதி பகுதியில் இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வெளிநாட்டிற்கு மிளகாய், மல்லி ஏற்றுமதி செய்யும் ராமர் அவர்கள் கூறியதாவது,




கமுதியைச் சேர்ந்த 260 விவசாயிகள் ஒருங்கிணைந்து 'கமுதி பாரம்பரிய இயற்கை பயிர் உற்பத்தியாளர் சங்கத்தை' அமைத்து செயல்பட்டு வருகின்றனர்.



கடந்த சில ஆண்டுகளாக மிளகாய் சாகுபடி செய்வதற்கு முன்னரே வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்கள் முன்கூட்டியே எங்களிடம் ஏற்றுமதிக்கான ஒப்பந்தம் செய்து வருகின்றன.

விவசாயத்துக்கு முன் நிலங்களில் இயற்கையாக ஆட்டுக்கிடை அமைத்து இயற்கை உரம் கிடைக்க செய்கிறோம். அதன்பின் மண்புழு உரம், பஞ்சகாவ்யா, மீன் அமில கரைசல் போன்ற இயற்கை உரங்களை பயன்படுத்துகிறோம்.

ரூபாய் பத்து லட்சத்துக்கு மேல் மதிப்புள்ள வேளாண் வேளாண் விளை பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயி களுக்கு விருது வழங்கி ஊக்குவிக்கும் திட்டத்தை கடந்த 2014 ஆண்டு மத்திய அரசின் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் கொண்டு வந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இருந்து 19 பேர் உட்பட நாடு முழுவதும் 500 விவசாயிகளை அழைத்து பாரத பிரதமர் நரேந்திர மோடி பாராட்டினார், அவர்களில் நானும் ஒருவன் என்று கூறினார்.

தமிழக கவர்னர் சார்பில் சிறந்த வேளாண் விவசாயி என மற்றும் தோட்டக்கலை மழை பயிர் சார்பில் சிறந்த விவசாயி என பரிசுகள் வாங்கியுள்ளேன்.

இயற்கை சாகுபடி முறையில் நாங்கள் விளைவிக்கும் விளை பொருட்களுக்கு சந்தையில் நல்ல மதிப்பு உள்ளது. குறிப்பாக எங்கள் மிளகாய் வத்தல்களுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது.

இயற்கை விவசாய மிளகாய் வத்தல்களுக்கு அதிக மவுசு இருப்பதால் கடந்த ஆண்டு அமெரிக்காவை சேர்ந்த ஒரு நிறுவன ஊழியர்கள் நேரில் வந்து எங்கள் கிராமத்தில் மிளகாய் வயல்களை பார்வை யிட்டு 200 டன் மிளகாய் வத்தல்களுக்கான ஒப்பந்தம் செய்து சென்றனர்.



கடந்த 16 வருடங்களாக ராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுகா, ராமசாமிபட்டி ஊராட்சியில் அமைந்துள்ள கோரைப்பள்ளம் கிராமத்தில் 12 ஏக்கரில் மிளகாய் மற்றும் சிறிய வெங்காயம், 16 ஏக்கரில் வாழை, 5 ஏக்கரில் நெல், மக்காச்சோளம் என மொத்தம் 33 ஏக்கருக்கு மேல் இயற்கை முறையில் விவசாயம் செய்து வருகிறேன். மேலும் வேளாண் துறையின் அறிவுறுத்தலின் பேரில் விதை நேர்த்தி செய்யப்பட்ட மிளகாய், பருத்தி, நெல் விதைகளை உற்பத்தி செய்து வேளாண் துறைக்கும் விவசாயிகளுக்கும் வழங்கி வருகிறேன் என்றார்.

விவசாயிகள் வேளாண்மையுடன் ஆடு, மாடுகளும் வளர்க்க வேண்டும். கால்நடைகள் மூலம் நல்ல வருமானம் மட்டுமின்றி இயற்கை உரமும் கிடைக்கும். திட்டமிட்ட முறையில் இயற்கை விவசாயம் செய்தால் விவசாயிகள் நல்ல வருமானத்தை பெற முடியும். விவசாயத்துக்கு முன் நிலங்களில் இயற்கையாக ஆட்டுக்கிடை அமைத்து இயற்கை உரம் கிடைக்க செய்கிறோம். அதன்பின் மண்புழு உரம், பஞ்சகாவ்யா, மீன் அமில கரைசல் போன்ற இயற்கை உரங்களை பயன்படுத்துகிறோம்.

இயற்கை உரங்களை பயன்படுத்தி மிளகாய் உற்பத்தி செய்து மிளகாய் வத்தல்களை கடந்த 10 வருடங்களுக்கு மேல் அமெரிக்கா, ஜெர்மனி, சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறேன். கடந்த சில ஆண்டுகளாக மிளகாய் சாகுபடி செய்வதற்கு முன்னரே வெளி நாடுகளில் உள்ள நிறுவனங்கள் முன்கூட்டியே எங்களிடம் ஏற்றுமதிக்கான ஒப்பந்தம் செய்து வருகின்றன என்றார்.

மேலும் விபரங்களுக்கு கமுதி வேளாண் இயற்கை விவசாயி ராமரை 91594 05051. என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# கழுதை வளர்க்க மானியம் - தெரியுமா?



இந்தியாவில் கழுதைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாளாக குறைந்து வரும் நிலையில், அழிந்து போகும் விலங்குகளை காப்பாற்ற மத்திய அரசு தேசிய கால்நடை வளர்ப்பு இயக்கம் (NATIONAL LIVE STOCK MISSION (NLM) மானியம் கொடுத்து அழிந்த வரும் நம்முடைய நாட்டு இனங்கள் கால் நடைகளை வளர்க்க வழங்கப்படுகிறது.

**கழுதைகளின் இன்றைய நிலை**

ஒரு காலத்தில் கழுதைகள் பெரிய போக்குவரத்து சாதனமாக ஓரிடத்திலிருந்து வண்டி செல்லாமுடியாத மலைப்பகுதிகள் குன்றுகளில் பயன்படுத்தப்பட்டு வந்தன. இயந்திரங்களின் வருகையால் படிப்படியாக கழுதைகள் பொதி சுமைக்க பயன் படுத்துவது குறைந்தே விட்டது. இந்தியாவில் சுமாராக 1.23 லட்சம் கழுதைகள் (DONKEYS) இருந்தன. இது 2012ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 60% குறைவாகவே உள்ளன.

எனவே அழிந்து வரும் கழுதை இனங்களை பாதுகாத்து இனப்பெருக்கம் செய்ய கழுதை வளர்ப்பு பண்ணை தொடங்கிட மானியம் வழங்கப்படுகிறது.

**என்னென்ன விலங்குகள் வளர்க்க மானியம் உண்டு தெரியுமா?**

கழுதைகள் மட்டுமல்ல, குதிரைகள், ஓட்டகங்கள் போன்ற விலங்குகளை பண்ணையாக வைத்து வளர்க்க விரும்புவோர் களுக்கு அதிகபட்சமாக 50 லட்சம் வரை மானியம் வழங்கப் படும்.

**எந்த துறையின் சார்பாக வழங்கப்படுகிறது?**

மத்திய மீன் வளம் மற்றும் கால்நடை பாரமரிப்பு மற்றும் பால் வளத்துறை இதனை மேற்கொண்டு மானியம் வழங்கப்படுவதாக தகவல்.

கழுதை வளர்க்க மொத்த திட்ட மதிப்பிட்டில் 50% மானியமாக அதிகபட்சமாக 50 லட்சம் வரை வழங்கப்படுகிறது.

**யாரெல்லாம் மானியம் பெற தகுதியுள்ளவர்கள்?**

தனிநபர்கள் சுய உதவிக்குழுக்கள் (SHG) உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPO) மற்றும் கூட்டுறவு அமைப்புகள். பிரிவு 8யின் கீழ் வரும் நிறுவனங்கள் தகுதியானவை.

**தகுதிகள் & நிபந்தனைகள்**

கழுதை இனப்பெருக்க பண்ணை அமைக்க குறைந்தது 50 பெண் கழுதைகள் (FEMALE DONKEY - JENNIES) 5 ஆண் கழுதைகள் (MALE DONKEY - JACKS) இருக்க வேண்டும். இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டால் மானியம் (SUBSIDY), இரண்டு தவணைகளாக வழங்கப்படும். இத்திட்டத்திற்கான வங்கி கடனுக்கு ஒப்புதல் வழங்கியவுடன் முதல் தவணை (FIRST INSTALLMENT) வழங்கப்படும். பண்ணை அமைக்கும் பணி முடிந்தவுடன் திட்டங்களை ஆய்வு செய்து இரண்டாவது தவணை ஆய்வுக்கு பிறகு வழங்கப்படும்.

உள்நாட்டு, நாட்டு புற கால்நடை வளங்களை பாதுகாக்கும் முயற்சியில் தான் வழங்கப்படுகிறது. வெளிநாட்டு இனங்களுக்கு அல்ல.

என்ன கழுதை பண்ணை அமைத்தால் கழுதைகளின் பால் பொருட்களுக்கு உலக அளவில் டிமாண்ட் (DEMOND) உள்ளதாக தரவுகள் உள்ளன.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்


ஜெயின்
நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம்
கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு
செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# தமிழ்நாட்டில் வெங்காய உற்பத்தியில் உயிர்சார் உரங்கள் மற்றும் உயிர்க்கள ஊக்கிகளின் பங்கு மற்றும் தாக்கம் – ஒரு பார்வை

தமிழ்நாடு மாநிலத்தில் வெங்காயம் ஒரு முக்கிய வணிகத் தோட்டக்கலைப் பயிராக விளங்குகிறது. மக்களின் அன்றாட உணவுப் பழக்கங்களில் தவிர்க்க முடியாத காய்கறியாக வெங்காயம் பயன்படுவதால், அதன் தேவை ஆண்டு முழுவதும் நிலைத்திருக்கிறது.



பெரம்பலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், திருச்சி, கோயம்புத்தூர், திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் வெங்காயம் பரவலாகப் பயிரிடப்படுகிறது. அதிக மகசூல் மற்றும் உடனடி பலனை நோக்கி விவசாயிகள் வேதியியல் உரங்களை அதிகமாகப் பயன்படுத்தி வந்தனர். இதனால் மண் வளச்சேதம், உற்பத்திச் செலவு உயர்வு, சூழலியல் பாதிப்பு போன்ற பிரச்சி னைகள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில், உயிர்சார் உரங்கள் மற்றும் உயிர்க்கள ஊக்கிகள் நிலையான வெங்காய உற்பத்திக்கான மாற்றுத் தீர்வாக உருவெடுத்துள்ளன.

**1. தமிழ்நாட்டில் வெங்காயப் பயிரின் நிலை மற்றும் ஊட்டச் சத்து தேவைகள்**

வெங்காயம் ( Allium cepa L. ) ஒரு குறுகிய கால, அதிக ஊட்டச்சத்து தேவைப்படும் பயிராகும். இது வேர்சூழல் (Rhizosphere) நுண்ணுயிர் செயல்பாட்டுக்கு நன்றாக பதிலளிக்கும் தன்மை கொண்டது.

**வெங்காயத்தின் முக்கிய ஊட்டச்சத்து தேவைகள்**

- நைட்ரஜன் (N) – இலை வளர்ச்சி
- பாஸ்பரஸ் (P) – வேர்வளர்ச்சி, கிழங்கு உருவாக்கம்
- பொட்டாசியம் (K) – கிழங்கு பருமன், தரம்



● சல்பர் (S) – வாசனை, தரம்

● நுண்ணூட்டச் சத்துக்கள் – சிங்க், இரும்பு, போரான்

வேதியியல் உரங்கள் மட்டுமே தொடர்ந்து பயன்படுத்தப்படும் போது, இந்த ஊட்டச்சத்துக்கள் மண்ணில் கிடைக்காத வடிவில் மாறுகின்றன. இதனைச் சரி செய்ய உயிர்சார் உரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**2. உயிர்சார் உரங்கள் – வரையறை, வகைகள் மற்றும் செயல்முறை**

**உயிர்சார் உரங்கள் என்றால் என்ன?**

மண்ணில் அல்லது விதை/நாற்று நிலைகளில் பயன்படுத்தப் படும் உயிருள்ள நுண்ணுயிர்கள், பயிர் வளர்ச்சிக்கு தேவை யான ஊட்டச்சத்துக்களை இயற்கையாக கிடைக்கச் செய்வன வாகும். இவை மண்ணின் உயிரியல் செயல்பாட்டை மேம் படுத்துகின்றன.

**3. வெங்காயத்தில் பயன்படும் முக்கிய உயிர்சார் உரங்கள்**

**3.1 Azospirillum**

● காற்றிலுள்ள நைட்ரஜனை நிலைநிறுத்தும்
● வேர்மூல வளர்ச்சியை அதிகரிக்கும்
● செடி வளர்ச்சியை ஊக்குவிக்கும்

**தாக்கம் :**
● 20–30% வரை நைட்ரஜன் உரச் சேமிப்பு
● இலை எண்ணிக்கை மற்றும் செடி உயரம் அதிகரிப்பு

**3.2 Phosphobacteria**

● மண்ணில் கிடைக்காத பாஸ்பரஸை கரைக்கும்
● வேர்களின் உறிஞ்சும் திறனை அதிகரிக்கும்

**தாக்கம் :**
● கிழங்கு உருவாக்கம் விரைவாக நடைபெறும்

● கிழங்கு எடை மற்றும் பருமன் அதிகரிக்கும்

### 3.3 Potassium Solubilizing Bacteria (KSB)

● மண்ணில் உறைந்துள்ள பொட்டாசியத்தை கரைக்கும்
● தாவர உடல் வலிமையை அதிகரிக்கும்

**தாக்கம் :**
● கிழங்கு தரம் மேம்பாடு
● சேமிப்பு காலத்தில் அழுகல் குறைவு

### 3.4 VAM / AM பூஞ்சைகள் (Mycorrhiza)
● வேர்ப்பரப்பை பல மடங்கு அதிகரிக்கும்
● நீர் மற்றும் ஊட்டச்சத்து உறிஞ்சலை மேம்படுத்தும்

**தாக்கம் :**
● வறட்சி தாங்கும் திறன் அதிகரிப்பு
● குறைந்த உர பயன்பாட்டிலும் நல்ல மகசூல்

## 4. உயிர்க்கள ஊக்கிகள் – வளர்ச்சியை வேகப்படுத்தும் சக்திகள்

### உயிர்க்கள ஊக்கிகள் என்றால் என்ன?

பயிரின் வளர்ச்சி, ஊட்டச்சத்து உறிஞ்சல், மன அழுத்தத் தாங்கும் திறன் மற்றும் உற்பத்தித் திறனை நேரடியாக ஊக்கு விக்கும் இயற்கை அல்லது உயிரியல் சார்ந்த பொருட்களே உயிர்க்கள ஊக்கிகள்.

## 5. வெங்காயத்தில் முக்கிய உயிர்க்கள ஊக்கிகள்

### 5.1 கடல்வள்ளி சாறு (Seaweed Extracts)

● இயற்கை வளர்ச்சி ஹார்மோன்கள் கொண்டது
● இலை வளர்ச்சி மற்றும் கிழங்கு பெருக்கம்

**தாக்கம் :**
● வெப்பம், வறட்சி போன்ற சூழல் அழுத்தம் குறைவு
● மகசூல் 10–20% வரை அதிகரிப்பு

### 5.2 ஹியூமிக் & ஃபுல்விக் அமிலங்கள்
● மண் கட்டமைப்பை சீராக்கும்
● நுண்ணுயிர் செயல்பாட்டை ஊக்குவிக்கும்

**தாக்கம் :**
● ஊட்டச்சத்து உறிஞ்சல் அதிகரிப்பு
● வேர்வளர்ச்சி மேம்பாடு

**5.3 அமினோ அமிலங்கள்**

- செல் வளர்ச்சியை தூண்டும்
- நோய் அல்லது வெப்ப அழுத்தத்திலிருந்து விரைவான மீட்பு

**5.4 Trichoderma & Pseudomonas**

- மண் வழி நோய்களை கட்டுப்படுத்தும்
- பயிர் வளர்ச்சியை மறைமுகமாக ஊக்குவிக்கும்

**6. உயிர்சார் உரங்கள் + உயிர்க்கள ஊக்கிகள் – ஒருங்கிணைந்த தாக்கம்**

**6.1 பயிர் வளர்ச்சி**

- செடி உயரம் அதிகரிப்பு
- இலை எண்ணிக்கை உயர்வு
- வேர் வளர்ச்சி சிறப்பு

**6.2 மகசூல்**

- கிழங்கு விட்டம், எடை அதிகரிப்பு
- மொத்த மகசூல் 15–30% வரை உயர்வு

**6.3 தரம்**

- உலர் பொருள் அதிகம்
- சேமிப்பு காலம் நீடிப்பு
- ஏற்றுமதி தரம் மேம்பாடு

**7. தமிழ்நாடு சூழ்நிலைக்கு ஏற்ற பரிந்துரைக்கப்படும் நடைமுறை**

- **நாற்று நேரம் :** Azospirillum + Phosphobacteria
- **நிலத் தயாரிப்பு :** FYM + Trichoderma + VAM
- **30 & 45 நாள் :** Seaweed extract + Humic acid (Foliar spray)
- குறைந்த அளவு வேதியியல் உரங்கள் – ஒருங்கிணைந்த மேலாண்மை

**8. பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம்**

**பொருளாதார நன்மைகள்**

- உரச் செலவு குறைவு
- நிகர வருமானம் அதிகரிப்பு
- நிலையான உற்பத்தி

**சுற்றுச்சூழல் நன்மைகள்**

- மண் மற்றும் நீர் மாசுபாடு குறைவு
- உயிர் பல்வகைமை பாதுகாப்பு

தமிழ்நாட்டில் வெங்காய உற்பத்தியில் உயிர்சார் உரங்கள் மற்றும் உயிர்க்கள ஊக்கிகள் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்து கின்றன. இவை மண் ஆரோக்கியம், பயிர் வளர்ச்சி, மகசூல், தரம் மற்றும் விவசாயியின் வருமானத்தை மேம்படுத்துகின்றன.

எதிர்கால நிலையான வேளாண்மைக்கு இத்தொழில் நுட்பங்கள் தவிர்க்க முடியாதவை.

"உயிரியல் தொழில்நுட்பமே – எதிர்கால வேளாண்மையின் அடித்தளம்."

தகவல் : **வெங்கடேஷ் ம, நிவேதா,ஆ.ல. உதவிப் பேரா சிரியர்கள் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), ஸ்ரீதேவி ச, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# எம்எஸ்எம்இ துறையில் எரிசக்தித் திறன் மற்றும் பசுமை நடவடிக்கைகளுக்கு மத்திய எம்எஸ்எம்இ அமைச்சகம் ஊக்கமளிக்கிறது

புது தில்லி, மார்ச் 10

எரிசக்தி சேவைத் திட்டங்களுக்கான தொழில்நுட்ப நிபுணத்துவம் எளிதாக கிடைக்கவும், பசுமை நடவடிக்கைகளில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்யவும் மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள், பசுமை நடைமுறை களை மேற்கொள்ள குறைபாடின்மை, சான்றிதழ் பெற்ற நிறுவனங்களுக்கு ஆலோசனை நிதியாக ஒவ்வொரு நிறுவனத் துக்கும் ரூ.2 லட்சம் வரையும், தொழில்நுட்ப மேம்பாட்டுக்கு நிதியுதவியாக ரூ.3 லட்சம் வரையும் வழங்கப்படுகிறது.

இந்த வகை தொழில்நிறுவனங்கள், பசுமை / எரிசக்தித் திறன் தொழில் நுட்பங்களை பயன்படுத்த எம்எஸ்இ – கிஃப்ட் திட்டத்தில் 2 சதவீத வட்டி மானியம் வழங்கப்படுகிறது. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் சுழற்சிப் பொருளாதார நடை முறைகளை பின்பற்ற 25 சதவீத மூலதன மானியம் வழங்கப்படுகிறது.

இந்தத் தகவலை இன்று மாநிலங்களவையில் மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள்துறை இணையமைச்சர் சோபா கரந்த்லாஜே கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் தெரிவித்தார்.



# ஜல் ஜீவன் இயக்கத்தை 2028 டிசம்பர் வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புது தில்லி, மார்ச் 10

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில், கூடிய மத்திய அமைச்சரவை, ஜல் சக்தி அமைச்சகம் முன்மொழிந்த ஜல்ஜீவன் இயக்கத்தின் செயல்பாட்டை கட்டமைப்பு உருவாக்கத்திலிருந்து சேவை வழங்கல் மையமாக மாற்றுவதற்கான முன்மொழிவுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதற்காக மொத்த செலவீனம் ரூ8.69 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில், மத்திய நிதியுதவி ரூ 3.59 லட்சம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

"சுஜலம் பாரத்" எனும் தேசிய டிஜிட்டல் கட்டமைப்பின் கீழ், ஒவ்வொரு கிராமத்துக்கும் தனிப்பட்ட அடையாள எண் வழங்கப் பட்டு, குடிநீர் வழங்கல் அமைப்பை டிஜிட்டல் மயப்படுத்துவது இதன் நோக்கமாகும்.

2019-இல் 3.23 கோடி கிராமப்புற குடும்பங்களில் 17% பேர் குடிநீர் குழாய் இணைப்பைப் பெற்றிருந்தனர். இதுவரை 12.56 கோடி கூடுதல் குடும்பங்களுக்கு ஜல்ஜீவன் இயக்கத்தின் மூலம் நீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் 19.36 கோடி கிராமப்புற குடும்பங்களில் சுமார் 15.80 கோடி குடும்பங் களுக்கு குழாய் மூலம் குடிநீர் கிடைக்கிறது.

ஜல்ஜீவன் இயக்கத்தின் மூலம் பெண்கள் நீர் எடுத்துச் செல்லும் வேலையிலிருந்து விடுபட்டு, வேலை மற்றும் கல்வியில் அதிக பங்கு பெற முடிந்துள்ளது. தினசரி 5.5 கோடி மணி நேரம் வேலை மிச்சமாகியுள்ளது. 4,00,000 குடல் தொற்று மரணங்கள் தடுக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. நோபல் பரிசு வென்ற மைக்கேல் கிரெமர் குழந்தை மரணங்களில் 30% குறைவு ஏற்படும் என்றும் கூறியுள்ளார்.

ஜல்ஜீவன் இயக்கத்தின் 2.0 திட்டத்தின் மூலம் 2028 டிசம்பர் வரை நாட்டின் அனைத்து 19.36 கோடி கிராமப்புற குடும்பங் களுக்கும் குழாய் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குடிநீர் சேவைகள் நிலைத்திருக்கும் முறையில், குடிமக்கள் மையமாக வழங்கப்படும். ஜல்ஜீவன் இயக்கத்தின் 2.0 திட்டம், வளர்ந்த பாரதம் @ 2047 நோக்கத்துடன் கிராமப்புற நீர்ப்பாசன சேவையை 24X7 அடிப்படையில் வழங்கும் விதத்தில் செயல்படும்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**